## மழைக்கால காப்பீடு திட்டம் - காபி (RISC)

மழைக்கால காப்பீடு திட்டம் - காபி (RISC) என்பது தனித்தன்மை வாய்ந்த மழைக்கால காப்பீடு திட்டம், குறிப்பாக கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு காபி உற்பத்தியாளர்களுக்காக வடிவமைக்கப் பெற்றது. இத்திட்டம், காபி வாரியம், மத்திய காபி ஆராய்ச்சி மையம் மற்றும் இம்மாநில உற்பத்தியாளர்களுடன் கலந்தாலோசித்து வடிவமைக்கப்பட்டதாகும். RISC, காபி உற்பத்தியாளர்களுக்கு மழை பெய்ததால் ஏற்பட்டிருக்கும் நேர் மறையான தாக்குதல்களில் மூலம் ஏற்பட்டிருக்கும் இடர்களுக்கு பயனுள்ள மேலாண்மை உதவி புரிதலாகும்.

## RISCயின் மூலம் பெறப்படும் மிக முக்கியப் பயன்கள்

- நேர்மறையான / பாதக மழைகளை சுயமாக உறுதிப்படுத்த மற்றும் அளக்கவும் முடியும்.
- இத்திட்டத்தை வடிவமைக்கப்பட்ட வழியலகுகள் பொருத்தமானதாகவும், உரியதாகவும், பெருமளவு மழையினால் காபி உற்பத்தியில் ஏற்படும் இடர்களைச் சார்ந்தும் இருக்கும்.
- நஷ்ட காலத்திலிருந்து 45ந்து நாட்களுக்குள், விரைவாக நஷ்டஈடு தொகை வழங்கப்படும்.
- காப்புறுதி வாய்ப்புகள்
- காப்பீடு காலக்கட்டம்
- காப்பீடு பெறுவோர்
- பணக் கோரல்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றது.

- காப்பீடு தொகை
- வெகுமதி
- வெகுமதி மானியம்
- காப்பீட்டை எவ்வாறு பெறுவது

**காப்புறுதி வாய்ப்புகள்**

- இத்திட்டம், குறிப்பிட்ட பூகோள இடம் மற்றும் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் குறைவாகவோ அதிகமாகவோ பெறப்பட்ட மழை நீரால் காபி தரத்திலோ அல்லது மகசூலிலோ குறை ஏற்பட்டிருந்தால், இத்திட்டத்தில் காப்பீடு செய்தவரின் தேர்வைப் பொறுத்து நஷ்டஈடு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உள்ள காப்புறுதி தேர்வுகளில், அதிகபட்ச காப்பீடு தொகை ஒவ்வொரு தேர்விற்கும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் பின்குறிப்பிட்டுள்ள தேர்வு வசதிகளை வழங்குகின்றது.

**பூக்கும் பருவ மழை**

- 1 மார்ச் முதல் 15ந்து ஏப்ரல் (ரோபஸ்டா) மற்றும் 1 ஆம் மார்ச் முதல் 30 ஆம் ஏப்ரல் (அரேபிகா) இடையே பெறப்பட்ட மழையினால் மலர்கள் அரும்பு பூவாக மலரும் (அரும்பு பெரிதாகுதல் மற்றும் மலர்கள் மலருகின்ற காலம்) காலங்களில் பெறப்பட்ட மழை ஆகும். தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு ஒட்டு மொத்தமாக 25 மில்லி மீட்டர் மழை நீர் இப்பருவத்தில் சாதாரணமாக தேவைப்படும்.

**ஆதரவு மழை**

- ஆதரவு மழை என்பது பருவக்கால மழை தொடங்கிய 18 ஆம் நாளில் ஆரம்பித்து 40வது நாள் வரை பெறப்பட்ட மழை நீர். இம்மழையால் காபி பழங்கள் அபிவிருத்தியடையும். தொடர்ச்சியாக 2 நாட்களுக்கு ஒட்டு மொத்தமாக 15 மில்லி மீட்டர் மழைநீர் இப்பருவத்திற்கு சாதாரணமாகத் தேவைப்படும்.

**பருவ மழை**

- பருவமழை என்பது காபிப் பழம், தேவையான அளவு வளர்ச்சியடைவதற்காக 1 ஆம் ஜீலை முதல் 31 ஆம் ஆகஸ்ட் வரை பெறப்படும் மழை ஆகும். எனினும் கேரளத்தில் இப்பருவம் 1 ஆம் ஜீன் முதல் 31 ஆம் ஆகஸ்ட் வரை பெறப்படும் மற்றும் தமிழ்நாட்டில் வட கிழக்கு பருவ மழை 1 ஆம் அக்டோபர் முதல் 30 ஆம் நாள் நவம்பர் வரை பெறப்படுவதாகும். முன்பாகவே நவம்பர் வரை மற்றும் முழுமையான வளர்ச்சி அடைவதற்கும், மழையின் அளவு சீராக இருப்பது பயனைத் தரும்.
- தொடர்ச்சியாக ஏழு நாட்களில் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கும் குறிப்பிட்ட அளவை ஒட்டு மொத்த மழைநீரின் அளவு தாண்டினால், காபி மகசூலில் பாதக நிலை ஏற்படும்.

**காப்பீடு காலக்கட்டம்**

இத்திட்டம் 1 ஆம் மார்ச் முதல் 31 ஆம் ஆகஸ்ட் 30 ஆம் தேதி நவம்பர் வரை இயங்கப்படும். ஒவ்வொரு பருவத்திற்குரிய காப்புறுதி காலங்கள் பின்வருமாறு

பூக்கும் பருவ காலமழை

- 1 ஆம் மார்ச் முதல் 15 ஆம் ஏப்தல் (ரோபஸ்டா) / 30 ஆம் ஏப்ரல் (அரேபிகா)

**ஆதரவு மழை**

- பூக்கும் பருவ மழை வந்த 18 ஆம் நாளிலிருந்து 40 ஆம் நாள் வரை

**பருவ மழை**

- 1 ஆம் ஜீன் / 1 ஆம் ஜீலை முதல் 31 ஆம் ஆகஸ்ட் வரை
- 1 ஆம் அக்டோபர் முதல் 30 ஆம் நவம்பர் வரை

**காப்பீடு பெறுவோர்**

- கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில், ரோபஸ்டா / அரேபிகா இரக காபிகளான உற்பத்தி செய்யும் காபி உற்பத்தியாளர்கள் மற்றும் மழையால் காபி உற்பத்தியோ / மகசூலால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற அனைவரும் இத்திட்டத்தின் கீழ் காப்பீட பெறுவதற்கு தகுதியானவர்கள்.

**பணக்கோரல்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றது.**

- பூகோள இடங்களில் (காபி பகுதி) தேர்வு வசதிகளுக்கேற்ப திட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குறைவாகவோ / அதிகமாகவோ பெறப்பட்ட மழை நீரின் அளவை குறிப்பிட்டுள்ள இயங்கு நிலையுடன் ஒப்பிடுவர். காப்பீடு செய்தோர்க்கு வழங்கப்படும் பயன்பாட்டுத் தொகை குறிப்பிட்டுள்ள இயங்கு நிலைக்கேற்றவாறு இருக்கும். இத்தொகை இத்திட்டத்திலுள்ள பல்வேறு தேர்வு வசதிகளில், குறிப்பிட்டுள்ள அதிகபட்ச காப்பீடு தொகையாகும்.

**பணக்கோரல் ஆவணம்**

குறிப்பிட்ட நிறுவனம் / நிலையங்களில் பெறப்பட்ட மழைநீர் தகவல்களைக் கொண்டு தானியங்கி மூலம் பணக்கோரர்கள் கணக்கீடு செய்து காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும். பணக்கோரல்கள் பட்டுவாடா செய்யப்படும் நேரத்தில் காபி பயிர் செய்யும் பகுதிகளில், குறிப்பிட்ட இரக காபி வகையை விளைவிக்கும் காப்பீடு உற்பத்தியாளர்கள் அனைவரும் சீராக ஒரே மாதிரியான காப்பீடு தொகை வழங்கப்படும். திட்ட அறிக்கை படிவத்தில் முன்பே குறிப்பிட்டது போல, பணக்கோரலுக்கான காப்பீடு தொகை காப்பீடு பெற்ற காபி உற்பத்தியாளர்களின் வங்கி கணக்கில் சேர்க்கப்பட்டு விடும்.

**காப்பீடு தொகை**

ஒரு எக்டருக்கு, ரோபஸ்டா மற்றும் அரேபிகா காபி இரகங்களுக்கு அதிகபட்ச காப்பீட்டுத் தொகை முறையே ரூ. 20,000 மற்றும் ரூ. 30,000 வழங்கப்படுகின்றது. இத்தொகையே அதிகபட்ச நஷ்ட ஈடாக விவசாயக் காப்பீடு நிறுவனத்தால் இத்திட்டத்தில் உள்ள அனைத்து காப்புறுதி உடன்பாடுகளுக்கும் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவிற்கும் வழங்கப்படும் விவரங்கள் பின்வருமாறு.

| பிரிவு | ரோபஸ்டா | அரேபிகா |
|---|---|---|
| பூக்கும் பருவமழை | ரூ. 10,000 | ரூ. 16,000 |
| ஆதரவு மழை | ரூ. 4,000 | ரூ. 6,000 |
| பருவ மழை | ரூ. 6,000 | ரூ. 8,000 |
| மொத்தம் | ரூ. 20,000 | ரூ. 30,000 |

**வெகுமதி**

குறிப்பிடப்பட்டுள்ள பூகோளப் பகுதியில் உள்ள கடந்த கால் மழைநீர் வருகையின் இயல்பு, காபி இரகம், இடம், தேர்ந்தெடுத்துள்ள காப்புறுதி வசதி, காபி உற்பத்தியின் பரப்பளவு போன்றவற்றை புள்ளி விவரமாகவே / இழப்பு கணக்கீட்டைக் கொண்டோ வெகுமதி கட்டணம் செலுத்தப்படவேண்டும். மூன்று பிரிவு வெகுமதி கட்டணத்தில் சிறிது சேமிக்க முடியும்.

**வெகுமதி மானியம்**

காபி வாரியம், 10 எக்டருக்கு மலைத்தோட்டம் வைத்திருக்கும் காபி உற்பத்தியாளர்களுக்கு, 50 சதவிகிதம் வரைக்கும் வெகுமதி மானியம் வழங்குகிறது. மானிய விவரங்கள் பின்வருமாறு.

| அரேபிகா | ரோபஸ்டா |
|---|---|
| மானியம் (ஒரு எக்டர்) | மானியம் (ஒரு எக்டர்) |
| 50 சதவிகிதம் வெகுமதி தொகை ரூ. 2,500 உச்ச வரம்பிற்கு உட்பட்டது. | 50 சதவிகிதம் வெகுமதி தொகை ரூ. 2,000 உட்பட வரம்பிற்கு உட்பட்டது. |

**காப்பீட்டை எவ்வாறு பெறுவது**

அனுமதிப் பெற்ற நிறுவனங்கள் / காப்பீடு இடைத்தரகர்கள் இந்திய விவசாயக் காப்பீடு நிறுவனத்தின் பிரதிநிதிகள் காபி வாரியத்தின் இளநிலை / முதுநிலை தொடர்பு அதிகாரிகள் மூலம் கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலுள்ள

காபி தோட்டப் பகுதிகளிலிருந்து திட்டறிக்கைப் படிவம் மற்றும் வெகுமதியை சேகரிப்பர். இந்நபர்கள், காபி உற்பத்தியாளர்களுக்கு பூர்த்தி செய்தல் போன்றவற்றிற்கு உதவியாக இருப்பர். மானியம் கழிக்கப்பட்ட வெகுமதியை விவசாயக் காப்பீடு நிறுவனத் (AIC) தின் பெயரில் கணக்கு வைத்திருப்போருக்கான காசோலையின் மூலம் கட்டப்படவேண்டும்.

மற்ற பிற விவரங்களுக்கு இங்கே அழுத்தவும்.

ஆதாரம் : //www.inidacoffee.org/advertisement/rainfall-21-2-08htm